நாள்.05.01.2024

**அசல் வழக்கு எண். 26/2022**

வா.சா.1 -1 முதல் 6 மற்றும் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனது இடத்தின் சர்வே எண் 55 /2 ஏ 2. மேற்படி சொத்து எனக்கு எப்படி கிடைத்தது என்றால் கிரயம் வாங்கிய சொத்து. எ ந்த வருடம் கிரயம் வாங்கினேன் என்றால் 1975 ல். அந்த கிரய பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி கிரய பத்திரத்தில் நான்கெல்லையில் என்ன போடப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. புல எண் 63/2 ஏ 1 யாருக்கு சொந்தம் என்றால் எனக்கு சொந்தமானது. அந்த சொத்து எப்படி கிடைத்தது என்றால் 2000 ல் கிரயம் பெற்றேன். 2000 ல் கிரயம் பெற்ற கிரய பத்திரத்தில் என்ன நான்கெல்லை போடப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் கீழ்புறம் ஆவுடையப்பன், மேல்புறம் ராமதாசு, வடபுறம் பிரதிவாதிகள், தென்புறம் சர்வேயர் ராசந்திரன். புல எண் 63/8 யாருக்கு சொந்தம் என்றால் ஆவுடையப்பனுக்கு சொந்தமானது. அந்த சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என்று சொன்னால் ஆவுடையப்பன் அனுபவத்தில் உள்ளது. ஆவுடையப்பனுக்கு அந்த சொத்து எப்படி கிடைத்தது என்றால் கிரயம் பெற்ற சொத்து. எப்பொழுது கிரயம் பெற்றார் என்றால் ஞாபகமில்லை. ஆவுடையப்பன் கிரயம் பெற்ற கிரய பத்திரத்தின் சொத்து விவரத்தில் கண்டுள்ள நான்கெல்லை விவரம் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் புல எண் 63/2 ஏ 1 மற்றும் 63/8 ஆகிய சொத்திற்கு உண்டான கிரய பத்திரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி, இரண்டு கிரய பத்திரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை நிலை தெரியவரும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. புல எண் 55/2 ஏ 2 சொத்திற்கு உண்டான வரைபடம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு சொந்தமான புல எண் 55/2 ஏ 2 சொத்திற்கு மேல்புறம் யாருக்கு சொந்தமானது என்றால் 2 ம் வாதி ராமசந்திரனுக்கு சொந்தமான இடம். அதில் 2 ம் வாதி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். ராமசந்திரன் வீட்டிற்கு அடுத்த மேல்புறம் தென்வடல் தார்சாலை உள்ளது. ராமசந்திரன் சொத்திற்கு அடுத்த வடபுறம் யாருக்கு சொந்தமான சொத்து உள்ளது என்றால் புல எண் 55/2 ஏ 1 வண்டிப்பாதை உள்ளது. அந்த வண்டிப்பாதை கிழக்கு

மேற்காக உள்ளது என்றால் சரிதான். அந்த வண்டிப்பாதைக்கு நேர் வடக்கு யாருக்கு சொந்தமானது என்றால் ராமன் என்பவர் குடியிருந்து வருகிறார். கிழக்கு மேற்காக செல்லும் வண்டிப்பாதையாது , மேல்புறம் உள்ள தென்வடல் தார்சாலையுடன் இணைகிறது என்றால் சரிதான். தார்சாலையும், வண்டிப்பாதையும் இணையும் இடத்தில் வடிகால் குழாய் போடபட்டுள்ளது என்றால் சரியல்ல. தார்சாலைக்கும், வண்டிப்பாதைக்கும் இணையும் இடத்தில் வடிகால் குழாய் போட்டு கழிவு நீர் வடபுறமாக செல்கிறது என்றும், நான் இந்த வழக்கிற்காக பொய்யாக வடிகால் குழாய் இல்லை என சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தென்வடல் தார்சாலைக்கும், வண்டிப்பாதை இணையும் இடத்திலிருந்து வடமேற்கில் ஒரு பள்ளாங்கு தூரத்தில் சிவாடிக்குளம் உள்ளது என்றால் சரியல்ல. சிவாடிக்குளம் என ஒரு குளம் உள்ளது. தென்வடல் தார்சாலையும், வண்டிப்பாதையும் இணையும் இடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் சிவாடிக்குளம் உள்ளது என்றால் வடமேற்கில் அரை கிலோ மீட்டர் தூரத்தில் சிவாடிக்குளம் உள்ளது என்றால் சரிதான். தென்வடல் தார்சாலைக்கு மேற்கு பக்கம் தான் சிவாடிக்குளம் உள்ளது என்றால் சரியல்ல. தென்வடல் தார்சாலைக்கு எந்த பக்கம் சிவாடிக்குளம் உள்ளது என்றால் தென்வடல் தார்சாலை மேற்கு நோக்கி செல்கிறது, அதற்கு வடபுறத்தில் சிவாடிக்குளம் உள்ளது. அசல் வழக்கில் தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலமாக பார்வையிட நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலமாக பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்தால் உண்மை தெரியவரும் என்பதால் நீதிமன்ற ஆணையர் நியமிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**<u>பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,

District Munsif, Pattukkottai.